FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8081642

1. District : திருப்பூர் மாவட்டம் | PS: காவல்நிலையம் | Year: ஆண்டு 2025 | FIR No.: முத.அ. எண் 05/2025 | Date: நாள் 18.06.2025

2. (i) Act சட்டம்: 2018 P.C Act | Sections பிரிவுகள்: u/s 7(a) of pc Act 198

(ii) Act சட்டம்: The prevention of Corruption Act 1988 as amended in 2018 | Sections பிரிவுகள்: as amended in 201

(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 16.06.2025 at 12.00hrs

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை 17.06.2025 at 10.00hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.06.25 | Time : நேரம் 08.15 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக தணிணை குட்டிக்கு மகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தெற்கு 300 மீ.மீ

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி அம்மையநாயக்கனூர் காவல்நிலை

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : [illegible] குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் | (b) Father's/ Husband's Name : [illegible] தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 47 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்புட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : TNSTC தொழில் ஓட்டுனர் | (g) Address : No-36 [illegible] முகவரி [illegible] -625001

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

தீரு. [illegible] அம்மையநாயக்கனூர் காவல் நிலையம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

18/06/25

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

18.06.2025

Name: பெயர் ப. பரணிச்சாமி

Rank: நிலை .....No. எண் .....

காவல் ஆய்வாளர்

உளுந்தூர்பேட்டை மற்றும் கிணாணை

தனிக்கதை

திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்: 5/2025 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

Column No.12, FIR Contents

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 18.06.2025-ம் தேதி காலை 08.15 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திரு.ச.சந்திரசேகரன், வயது 47/2025, த/பெ.சடையாண்டி, கதவு எண்.36, கொல்லம்பட்டறை தெரு, மதுரை-625001 என்பவர் நிலையம் ஆஜராகி கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு கொடுத்த புகாரை பெற்று 18.06.2025ம் தேதி காலை 09.15 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்:- திரு.ச.சந்திரசேகரன், வயது 47/2025, த/பெ.சடையாண்டி, கதவு எண்.36, கொல்லம்பட்டறை தெரு, மதுரை-625001 பெறுநர்:- துணைக் காவல் கண்காணிப்பாளர், இலஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல் அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். மதுரை மண்டலத்திற்குட்பட்ட சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் TNSTC கிளையில் ஒட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து திருப்புவனம் வரை செல்லும் பேருந்து ஓதுக்கப்பட்டுள்ளது. TN 64 AC 8928 (Hyundai Aura Car) என்ற பதிவு எண் கொண்ட காரை எனது மகன் விஷ்னுவர்தன் பெயரில் கடந்த ஜனவரி-2025ல் வாங்கினேன். அந்த காரை Safe Track என்ற கால்டாக்சி நிறுவனத்தில் இணைத்து கடந்த மூன்று மாதமாக எனது மகன் விஷ்னுவர்தன் ஒட்டிவந்தார். இந்நிலையில் கடந்த 14.06.2025 அன்று அதிகாலை 05.30 மணிக்கு திண்டுக்கல் to மதுரை செல்லும் ரோட்டில் வடக்கிலிருந்து தெற்காக அம்மையநாயக்கனூர் அருகே உள்ள டாபே டிரக்டர் கம்பெனி அருகே சென்று கொண்டிருந்த போது முன்னாள் சென்று கொண்டிருந்த TN 70AC 3183 என்ற பதிவு எண் கொண்ட Eicher லாரியின் பின்னால் மோதி விபத்து ஏற்படுத்திவிட்டார் என்று திண்டுக்கல் மாவட்டம் அம்மையநாயக்கனூர் காவல் நிலையத்தின் குற்ற எண்.126/2025, U/s.281, 125(a) BNS ன் படி என் மகன் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. விபத்து எற்பட்டதில் எனது மகனுக்கு வலது பக்க கண்புருவம் மேல் இரத்தக்காயமும், இடது கால் மற்றும் வலது கையில் இரத்தக்காயமும் ஏற்பட்டது. மேற்படி வழக்கு தொடர்பாக 16.06.2025 அன்று நண்பகல் சுமார் 12.00 மணியளவில் நானும் எனது மகன் விஷ்னுவர்தனும் எனக்கு தெரிந்தவரான Conductor திரு.துக்கமுத்து என்பவரை கூட்டிக்கொண்டு அம்மையநாயக்கனூர் காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கிருந்த சார்பு ஆய்வாளர் திரு.ஷேக் அப்துல் காதர் என்பவரை சந்தித்து விபரங்கள் கேட்டோம்.

அதற்கு திரு.ஷேக் அப்துல் காதர் என்னிடம் உங்கள் மகனை கைது செய்து ஜாமீனில் விடவும், காரினை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வுக்கு அனுப்பவும், லஞ்சமாக அவருக்கு ரூ.6,000/- கொடுக்கவேண்டும் என்று கூறினார். அதற்கு நான் தற்போது அவ்வளவு பணம் இல்லையென்றும், மகனுக்கு மருத்துவ செலவு செய்வதால் கஷ்டமாக உள்ளதாகவும் தெரிவித்தேன். அதற்கு திரு.ஷேக் அப்துல் காதர் அவர்கள் இப்போது இருப்பதை கொடுங்கள் கைது செய்து இன்றே ஜாமீனில் விடுகிறேன். மீதிப்பணத்தை MV அனுப்பும் போது கொடுத்துவிடுங்கள் என்று கூறினார். அவரிடம் நான் ரூ.2,000/- மட்டுமே வைத்துள்ளதாக தெரிவித்தேன். அந்தப் பணத்தை திரு.ஷேக் அப்துல் காதர் என்னிடம் லஞ்சமாக கேட்டு வாங்கிக் கொண்டார். பின்னர் மீதிப்பணத்தை புதன்கிழமை காலையில் கொண்டுவருமாறும், பணத்தை கொடுத்தால்தான் MV அனுப்பி வைப்பேன் என்றும் தெரிவித்து அனுப்பினார். எனது மகனையும் கைது செய்து பின்னர் ஜாமீனில் அனுப்பினார். அம்மையநாயக்கனூர் காவல் நிலையத்திலிருந்து மதியம் சுமார் 02.30 மணியளவில் நாங்கள் வெளியே வந்தோம். போலீஸ் ஸ்டேசனில் சார்பு ஆய்வாளர் திரு.ஷேக் அப்துல் காதர் லஞ்சமாக கேட்டு ரூ.2,000/-ம் பெற்றுக்கொண்டதை நான் எனது மகனின் மொபைலில் வீடியோவாக பதிவு செய்து கொண்டேன். பின்னர் Finance மற்றும் Insurance நிறுவனத்திலிருந்து வண்டியினை போட்டோ எடுத்து அனுப்புமாறு கேட்டார்கள். அதற்காக நேற்று 17.06.2025-ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் அம்மையநாயக்கனூர் காவல் நிலையத்திற்கு சென்று சார்பு ஆய்வாளர் திரு.ஷேக் அப்துல் காதர் அவர்களை பார்த்து காரினை புகைப்படம் எடுக்க அனுமதி கேட்டேன். அப்போது அவரிடம் கொடுக்க வேண்டிய லஞ்சப்பணம் ரூ.3,000/-த்தில் ஏதாவது குறைக்கலாம் என்று நினைத்து சார்பு ஆய்வாளர் திரு.ஷேக் அப்துல்காதர் அவர்களிடம் பணம் கொஞ்சம் குறைத்துக்கொள்ளுமாறு கேட்டேன். அதற்கு அவர் ரூ.2,000/-ம் லஞ்சமாக கொடுத்து விடுங்கள், நான் MV க்கு அனுப்பிவிடுகிறேன் என்றார். மேலும், MVக்கு ஆகும் செலவை நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்றார். பின்னர் என்னிடம் காரின் RC, அது தொடர்பான ஆவணங்கள், ஆதார்கார்டு மற்றும் லஞ்சப்பணம் ரூ.2,000/-த்தோடு புதன்கிழமை காலை அம்மையநாயக்கனூர் காவல் நிலையம் வந்து அவரிடம் கொடுத்தால் காரினை MV ஆய்வுக்கு அனுப்பி வைத்துவிடுவதாக கூறினார். என்னிடம் பணம் இல்லாததால் நானும் காரினை போட்டோ எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன். என் மகன் ஒட்டி விபத்து ஏற்படுத்திய காரினை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வுக்கு அனுப்ப ரூ.2,000/- லஞ்சமாக கொடுத்து வேலையை முடிக்க எனக்கு விருப்பமில்லை. என்னிடம்

லஞ்சம் ரூ.2,000/- கேட்ட அம்மையநாயக்கனூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.ஷேக் அப்துல் காதர் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன். இந்த புகாருடன் அம்மையநாயக்கனூர் காவல் நிலையத்தின் குற்ற எண்.126/2025ன் முதல் தகவல் அறிக்கையின் நகலை இணைத்துள்ளேன். மேலும் அம்மையநாயக்கனூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.ஷேக் அப்துல் காதர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.2,000/-ம் கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு, Sd/- xxxxx (S.சந்திரசேகரன், 18.06.2025)

Sir, Received the complaint on 18.06.2025 at 08.15 Hrs. A confidential verification was made on the general reputation of the accused, the motives, reliability and antecedent of the complainant and came to know that nothing adverse against the complainant and the reputation of the accused is learnt to be not good. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.05/2025 u/s 7(a) of Prevention of Corruption Act 1988, as amended by the PC (Amendment) Act 2018, on 18.06.2025 at 09.15 hrs and took up investigation. Sd/-xxxxx (P.Palanisamy, Inspector of Police, V&AC, Dindigul 18.06.2025)

Original FIR along with the complaint of Tr.S.Chandrasekaran, age 47/2025 S/o.Sadayandi, D.No.36, Kollam Pattarai Street, Madurai District are submitted to the Hon'ble Principal District Sessions Court, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

(P.Palanisamy) 18.06.25
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.